**தலைப்பு 329 - தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. ஆகையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகல்கள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதி மற்றும் 2018 சனவரி 01 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதிகளுக்கிடையே ரூபா 13,391,777 வித்தியாசமொன்று காணப்பட்ட போதிலும், அவற்றிற்கான காரணங்களினை இனங்காணுவதன் மூலம் அந்த வித்தியாசத்தினை இணக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு சொத்தினதும் பெறுமதி வித்தியாசம் இனங்காணப்பட்டு மீதி கீழ்க் கொண்டுவரப்பட வேண்டியதுடன் அவற்றிற்கான காரணங்களினை மேற்கோள் காட்டுவதன் மூலம் அந்த வித்தியாசத்தினை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதி மற்றும் நிதிநிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதிகளுக்கிடையே ரூபா 13,391,777 வித்தியாசமொன்று காணப்பட்டது. மேற்குறித்த வித்தியாசம் சரிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 29,680,827 நிலையான சொத்துக்கள், CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக | தொடர்புடைய சந்தர்ப்பங்களில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலையான சொத்துக்களினை | அறிக்கையிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுகைகளின் பெறுமதி மற்றும் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கிடையே ரூபா 9,133 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதுடன் மேற்குறித்த வித்தியாசத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசத்திற்கான காரணங்களினை இனங்காண்பதற்கு மற்றும் இணக்கங்களினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. ஆவணரீதியான பிழையொன்றைக் கொண்டிருந்தமையினால் ரூபா 9,133 தொகை தவிர்க்கப்பட்டிருந்தது. குறுக்குப் பதிவுகள் மூலம் அந்த தொகை அறிக்கையிடப் பட்டதிலிருந்து குறுக்குப் பதிவுகளாக கணக்குகளில் அது உள்ளடக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 272.2 மில்லியன் கட்டுநிதிகளினை வேண்டுகோள் விடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த அதேவேளை, ரூபா 402.5 மில்லியன் கட்டுநிதிகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. திறைசேரி ரூபா 129.8 மில்லியன் கட்டுநிதியொன்றை மாத்திரம் வழங்கியிருந்தது. அதற்கமைய, திணைக்களம் தேவைப்படுகின்ற கட்டுநிதி தொகையை சரியாக திட்டமிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதியை முறையாக திட்டமிட்டு வினைத்திறனாக முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆகையினால், ஏற்பாடுகளினைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடுகளின் முறையே 89 சதவீதம் மற்றும் 50 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. | தத்ரூபமாக சாத்தியப்படக் கூடியவாறு வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. |
| (ஆ) வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத செலவின விடயமொன்றுக்காக நிதிப்பிரமாணம் 66 இனூடாக ரூபா 3.08 மில்லியன் தொகையொன்று மாற்றப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த தொகையில் 97 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப்படுகின்ற போது மாத்திரம் நிதிப் பிரமாணங்களி னூடாக மாற்றல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | அந்த மென்பொருளில் காணப்பட்ட தொழில்நுட்ப ரீதியான குறையொன்று காரணமாக, புதிய சம்பள மென்பொருளுக்காக ICT நிறுவனத்திற்கு செலுத்துகைகளினை மேற்கொள்வதற்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 30,850,000 ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும், மேற்குறித்த தொகை 2018 ஆம் ஆண்டில் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 66-69 இன் கீழ் 09 செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் 05 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் 04 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் 06 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரை அதிகரித்திருந்தன. | தத்ரூபமாக சாத்தியப்படக் கூடியவாறு வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் எவ்.ஆர்.94(i) இன் பிரகாரம், கடப்பாடுகள் ஏற்படுவதற்கு முன்னர் தொடர்புடைய செலவின விடயத்தில் போதுமானளவு ஏற்பாடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான உறுதிப்படுத்தலின்றி ஒரு செலவின விடயத்திற்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளினை மிகைத்து ரூபா 21,724 இனால் செலவினம் ஏற்பட்டிருந்தது. | கடப்பாடுகளினை ஏற்படுத்தும் பொறுப்புக்களாக, தொடர்புடைய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. 2018 ஆம் ஆண்டின் திசெம்பரில் எதிர்பார்க்கப்பட்ட தொகையான மிகைத்து மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செலவின எல்லை மிகைத்திருந்தது. |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்படவேண்டிய உறுதிப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிதி திட்டமிடல் மற்றும் நிதி முகாமைத்துவம் என்பன வினைத்திறனான மேற்கொள்ளப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்பாடு உறுதிப்படுத்த வேண்டும். இருப்பினும், சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கைகளினை எடுத்திருக்காமை மேற்குறித்த 2.1, 2.2 மற்றும் 2.3 பந்திகளில் குறிப்பிடப்பட்ட கட்டுநிதி முகாமைத்துவம், செலவின முகாமைத்துவம் மற்றும் ஏற்படவுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் போன்றவற்றில் காணப்படும் பலவீனங்களின் பிரகாரம் அது | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 32 சுவிச்களினை (Switches) கொள்வனவு செய்யத் தவறியமை காரணமாக மற்றும் குறித்துரைக்கப்பட்ட கட்டுநிதி எல்லைக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மென்பொருட்கள் மற்றும் அபிவிருத்தி செலவின விடயத்திற்கான நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏற்பாடுகளின் மாற்றீடு சேமிக்கப்பட்டிருந்தது. |

அவதானிக்கப்பட்டது.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.5 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டின் அளவைச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் தொடர்புடைய நடவடிக்கைகள் 2019 மே 05 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின் பிரகாரம் பொருட்களின் அகற்றலுக்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பு சரியானது. நிதி அமைச்சில் காணப்படும் ஊடக உபகரணங்கள் தொடர்பில் முறையான அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களுடனான உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக சில தாமதங்கள் ஏற்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய 15 தொழிற்பாடுகளினை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டத்தினை திணைக்களம் தயாரித்து சமர்ப்பித்திருந்தது. இருப்பினும், மேற்குறித்த திட்டத்துடன் நிறுவன ரீதியான கட்டமைப்பு, பதவியணியினர் தொடர்பான தகவல்கள், கட்டுநிதி தேவைத்திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் போன்றவை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2019 இனைத் தயாரிக்கையில், அவ்வாறான பிழைகளினை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 தொழிற்பாடுகளினை நிறைவேற்றத் தவறியமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 அளவில் அரச நிதி முகாமைத்தவ விளைதிறன் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமையை (ITMIS) அமுல்படுத்துவதற்கு திட்டங்கள் வரையப்பட்டிருந்த போதிலும், அது செயற்பாட்டு ரீதியான நிலையில் காணப்படவில்லை என்பது வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. | திட்டமிட்ட நோக்கங்களினை அடைந்து கொள்வதற்காக கணனி முறைமையினை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். | ITMIS முறைமையின் பாதீட்டு திட்டங்கள், பாதீட்டு ஒதுக்கீடுகள் மற்றும் முறைமை நிர்வாக தொகுதிகள் 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் ஏனைய தொகுதிகளினை செயற்படுத்துவதற்கு திட்டங்கள் வரையப்பட்டிருந்த போதிலும், பல்வேறு காரணங்கள் காரணமாக அவற்றை செயற்படுத்த முடியாதிருந்தது. |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அந்தந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பீட்டளவில் பரீட்சிக்கக்கூடிய வகையொன்றில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், செயலாற்றல் அறிக்கை அதற்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பீட்டளவில் பரீட்சிக்கக்கூடிய வகையொன்றில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். | சில சந்தர்ப்பங்களில், இந்த திணைக்களம் காலத்தின் தேவைக்கேற்றவாறு செயற்பட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாத சில செயற்பாடுகளினை மேற்கொள்கின்றது. அதற்கமைய, சமமானவற்றுடன் ஒப்பிடுவதற்காக சமர்ப்பிப்பது சற்றுக் கடினமாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அறிக்கைகளினை முறையாக தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் திணைக்களத்தின் குறிகாட்டிகளின் அடிப்படையில் அதன்கீழ்க் காணப்படும் நிறைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டல்களின் இனங்காணுகை மற்றும் அடைதல்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் உள்ளடங்கலாக திட்டங்கள் பூரணமாகத் தயாரிக்கப்பட்டிராததுடன் அந்த நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு 2019 வரையிலும் எடுக்கப்பட்டிருந்த தேவையான நடவடிக்கைகள் தெடர்பில் கணக்காய்விற்கு எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட அடையக்கூடிய நிறைபேறான இலக்குகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட வேண்டியதுடன் அந்த நோக்கங்களினை விரைவாக அடைந்து கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிடையே 8 ஆவது மற்றும் 9 ஆவது இலக்குகளினை அடைந்து கொள்ளும் நோக்குடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.<br><br>2019 யூலை இல் இருந்து 18 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்குள் முழுத் தீவையும் மேவுகை செய்யக்கூடியவாறு, ITMIS முறைமையை அமுல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த 8 ஆவது இலக்கான கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட திறைசேரி முகாமைத்துவ முறைமையை மேற்கொள்வதற்கு தேவையான பின்னணியை தயாரிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>9 ஆவது இலக்கின் கீழ் கைத்தொழில் பற்றிய மேம்படுத்தல்களினை கொண்டுவரல் நோக்கத்துடன் புதிய கணனி முறைமை அறிமுகப்படுத்தப் பட்டிருந்ததுடன் புதிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் டிஜிட்டல் மாற்றீட்டு Digital |

| | | |
|---|---|---|
| | | Transformation செயன்முறைக்காக ஏனைய சாதனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில், 16 பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 35 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. மேற்குறித்த வெற்றிடங்கள் வெற்றிடமாக தொடர்ந்தும் காணப்படும் 07 சிரேஷ்ட மட்ட பதவிகளினை உள்ளடக்கியிருந்தது. | மேற்குறித்த வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றலில் பாதகமாக தாக்கமளிக்கின்ற மையாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வெற்றிடங்களினை நிரப்புவதற்கு இல்லையெனில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பில் வரிசை அமைச்சு மற்றும் பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. |
| (ஆ) 2018 நவம்பர் 23 இல் உதவிப் பணிப்பாளர் பதவியொன்றை (விசேட செயற்திட்டம்) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்த போதிலும், ஆட்சேர்ப்புத் திட்டத்தினை தயாரிப்பதற்கு மற்றும் தொடர்புடைய ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்புத் திட்டத்தினை தயாரிப்பதுடன் தொடர்புடைய ஆரம்ப நடவடிக்கைகள் செயல்முன்னேற்றத்தில் காணப்படுகின்றன. |
| (இ) கணக்காய்விற்கு கிடைக்கக் கூடிய தகவலின் பிரகாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படிருந்தார். இருப்பினும், அது | தொடர்புடைய பதவியை முறையாக அங்கீகரிப்பதற்கு அல்லது அத்தியாவசதியமற்ற தாகக் காணப்படுமானால் | தொடர்புடைய உத்தியோகத்தர், அபிவிருத்தி தந்திரோபாங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றாகக் காணப்படவில்லை. | அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நியமிக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிட்டு கடிதமொன்று நிதி அமைச்சினூடாக அந்த அமைச்சு செயலாளர்க்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திற்கு பதில் கிடைக்கப் பெறப்பட்டிருக்காததுடன் அது தொடர்பில் ஞாபகமூட்டல்களினை அனுப்புவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |